IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.

OS No. 313/2023

**P.W.1**

| | |
|---|---|
| Name | : சந்திரன் |
| Father/Husband Name | : |
| Place | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 77 |
| | |
| Date | : 17-04-2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.04.2026.

சத்திய பிராமணம் செய்யப்பட்டார்.

**1, 2 மற்றும் 11 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

21. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ல் தாவா சொத்து குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். சர்வே எண் தவறாக உள்ளது. தாவா புல எண் சொத்தை தான் மேற்கண்ட ஆவணத்தில் நான் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்பட்டும் வா.சா.ஆ.4 ன் சொத்து விவரத்தில் தாவா சொத்து எங்கு உள்ளது என்றால் 46/5 என்பது தான் தாவா சொத்து. அதன் விஸ்தீரனம் என்றால் 27 செண்ட். நான் சொல்வது தவறு என்றாலும், தாவா சொத்து விவரத்தின் பழைய பைமாஸ் நெம்பர் 45/6 க்கு புதிய சப்டிவிஷன் 46/5 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

22. எனவே, வா.சா.ஆ.4 தாவா சொத்திற்கு தொடர்பில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. நான் கன்னியப்பன் நாயக்கரிடம் இருந்து 1993 ஆம் ஆண்டு தாவா சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ல், வா.சா.ஆ.4 ன் சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்ட விவரங்கள் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.3 ல் குறிப்பிட்டபடி நான் கன்னியப்ப நாயக்கரிடம் இருந்து தாவா சொத்தை கிரையம் பெறவில்லை என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 என் மகனுக்கு நான் எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான்.

23. வா.சா.ஆ.5 ல் உள்ள சொத்து எங்கு உள்ளது என்றால் சென்னை, ராயப்பேட்டையில் உள்ளது. அது ஒரு அடுக்குமாடி குடியிருப்பு வீடாகும். ஏன் இந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் மகனுக்கு தானமாக தாவா சொத்தையும், அதன் தொடர்ச்சியாக அந்த அடுக்குமாடி குடியிருப்பு வீட்டையும் கொடுத்தால் வா.சா.ஆ.5 ஐ தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்திற்கு வா.சா.ஆ.5 ற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 தாவா சொத்தை பிரதிவாதிகள் கிரையம் பெற்றதற்கான கிரையம் ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டது எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் 11 ம் பிரதிவாதி சொன்னார்.

24. 11 ம் பிரதிவாதி நில அபகரிப்பு பிரிவில் புகார் அளித்ததாலும், மாவட்ட பதிவாளரிடம் புகார் கொடுத்ததாலும் அந்த விவரம் எனக்கு தெரிய வந்தது. வா.சா.ஆ.6 ஐ நான் நகல் பெற்று பார்த்த பிறகு தான் அந்த விவரம் எனக்கு தெரியும் என்றாலும், அதற்கு

முன்பாக எனக்கு தெரியும் என நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் தற்போது கூறிய விவரங்களை வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் வா.சா.ஆ.7 ஐ எப்போது பெற்றேன் என்றால் நினைவில்லை. 2013 ஆம் ஆண்டு பெற்றேன். அதன் பிறகு அதை என்னுடைய வழக்கறிஞரிடம் கொடுத்தேன்.

25. அதன் பிறகு தான் நான் வா.சா.ஆ.6 நகல் பெற்றேன். நான் மேற்கண்ட முன்எச்சரிக்கை அறிக்கை பெற்ற பிறகு ஆவணங்களை திருத்தம் செய்து தரும்படி கிரையதாரர்களிடம் நான் கேட்டேனா என்றால் கேட்டேன். ஆனால் தாவா சொத்தை எனக்கு அவர்கள் கிரையம் கொடுக்கவில்லை என மறுத்து சொல்லிவிட்டார்கள். நான் என்னுடைய கிரையதாரர் மீது ஏன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு அவர்கள் விவரங்கள் தெரியவில்லை. அவர்களின் விவரங்களை நான் எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் அதன் பிறகு தான் தெரிந்து கொண்டேன். 2012 ஆம் ஆண்டு தெரிந்து கொண்டேன்.

26. அதன் பிறகு ஏன் அவர்கள் மீது நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் 11ம் பிரதிவாதி மீது இருந்த நம்பிக்கையால் தாக்கல் செய்யவில்லை. அதை அவர் திருத்தம் செய்து கொடுப்பதாக சொன்னார். அந்த விவரங்களை என்னுடைய வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் முன்னுக்குபின் முரணான சங்கதிகளை சாட்சியமாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 11ம் பிரதிவாதியை ஒருபோதும் சந்திக்கவில்லை என்றாலும், அவர்களிடம் ஆவணங்களை

திருத்தம் செய்து தரும்படியும் நான் கேட்கவில்லை என்றாலும், தற்போது வழக்கிற்காக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

27. நான் வா.சா.ஆ.8–ஐ பெறுவதற்கு வருவாய் துறையில் என்ன என்ன ஆவணங்களை கொடுத்தேன் என்றால் கிரைய ஆவணம் மற்றும் தான செட்டில்மெண்ட் ஆவணத்தை கொடுத்து தான் பெற்றேன். அந்த விவரத்தை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வருவாய்துறையில் எனக்குள்ள செல்வாக்கை பயன்படுத்தி வா.சா.ஆ.8 ஐ நான் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வருவாய்துறையில் ஆவணங்களை சரிவர சரிபார்க்காமல் 1ம் வாதியின் பெயரில் தவறாக பட்டா அளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஐ கிராம நிர்வாக அலுவலரிடம் இருந்து தான் நான் வாங்கினேன் என்றால் சரிதான். நான் வட்டாட்சியரிடம் அது குறித்து மனு கொடுக்கவில்லை என்றால் கொடுத்தேன்.

28. வா.சா.ஆ.9 ஐ வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 மற்றும் வா.சா.ஆ.11 ஐ நான் வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்கண்ட ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.13 வழக்கிற்கு தொடர்ப்பில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. மேற்கண்ட வா.சா.ஆ.14 ஐ நான் எவ்வாறு வாங்கினேன் என்றால் எனக்கு தெரியவில்லை. என்ன காரணத்திற்காக வா.சா.ஆ.14 பெற்றேன் என்றால் தாவா சொத்தை விற்பனை செய்வதற்காக விண்ணப்பித்தேன். வா.சா.ஆ.15 மற்றும் வா.சா.ஆ.16 வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

29. வா.சா.ஆ.17, 19, 20 ஆகிய ஆவணங்களும் இவ்வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து கிரைய ஆவணத்தில் தட்டச்சு பிழை ஏற்பட்டதாக நான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், அந்த விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் 2012 –2013 ஆண்டுகளில் தெரிய வந்தது. வழக்கின் மூலத்தில் அது குறித்து நான் சொல்லியுள்ளேனா என்றால் 2013 என குறிப்பிட்டுள்ளது. நான் வழக்கு எழுமூலத்தில் அந்த விவரத்தை சரியாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் இந்த வழக்கிற்கான வழக்கெழுமூலத்தை தெளிவாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எனவே, இவ்வழக்கு அதன் அடிப்படையிலும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை

NILAVARASAN KASI Digitally signed by NILAVARASAN KASI

District Munsif cum Judicial Magistrate,
Thiruporur